# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

LT (U.K.)

SOLT (U.K.)

**(SOLT,BM BOX 3694,LONDON WC1 N3XX)** 0066

13-5-86 அன்று தமிழீழ விடுதலைப்புலிகளால் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்ட

## அறிக்கை

விடுதலைப்புலி உறுப்பினர்கள் TELO இயக்க உறுப்பினர்களுடன் கொடூரமான முறையில் நடந்து கொண்டார்கள் என்று யாழ்ப்பாண செய்திகளை ஆதாரம் காட்டி இந்திய UNI நிருபர் பத்திரி களுக்குச் செய்தி வெளியிட்டிருந்தார். இக் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் இயக்கம் வன்மையாக மறுக்கிறது. விடுதலைப்புலி வீரர்களிடம் சரணடைந்த இளம் TELO இயக்க உறுப்பினர்களை சுட்டுக் கொன்றதாகவும், உயிரோடு கொளுத்தியதாகவும் கூறப்பட்ட செய்திகளை நாம் ஆணித்தரமாக மறுக்கின்றோம். விடுதலைப்புலி வீரர்களிடம் சரணடைந்த அனைவரையும் நாம் விடுதலை செய்து விட்டோம். எனவும், கடுமையான எதிர்ப்பு காட்டிய இடங்களிலேயே இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இம்மோதலில் விடுதலைப்புலி வீரர்கள் விசர் பிடித்தவர்கள் போல் வெறித்தனமாக நடந்து கொண்டார்கள் என்றும் மிருகத்தனமான செயல்களை செய்தார்கள் என்றும் கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை ன்றும் அறிவிக்கின்றோம். அப்பத்திரிகை நிருபர் எதையும் நேரடியாகக் காணவில்லை. நேரில் ட்சிகளை கண்டோம் என கூறப்பட்டவர்கள் TELO ஆதரவாளர்களே, இவ் TELO ஆதரவாளர்களிடம் ந்து பாரபட்சமான வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளது.

PRLF இனால் நடத்தப்பட்ட கர்த்தால் பூரண வெற்றியளிக்கவில்லை. தமிழீழப் பத்திரிகைச் செய்தி படி சில கடைகள் மூடப்பட்டிருந்தன என்றும் பாடசாலைகள் பஸ் சேவைகள் வழமை போல் டபெற்றன என்றும் அறியப்படுகின்றது. TELO இல் இறந்தோர் பெரும்பாலானோர் கிழக்கு மாகா த்தைச் சேர்ந்தவர்கள் என்பது எவ்வித ஆதாரமும் அற்ற கூற்றாகும். எமது நடவடிக்கைகட்கு எதிராக யாழ்குடா நாட்டில் எவ்வித மக்கள் எதிர்ப்பும் கிளம்பவில்லை என்ற உண்மையை மறைக்கவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

TELO இயக்கம் ஒரு சமூக விரோத கும்பலாக செயற்பட்டதுடன் பல குற்ற செயல்களைப் பு தும், மக்களை மிரட்டியும் வந்துள்ளனர். எனவேதான் TELO இயக்கத்தினரை கண்டிக்கும் நோக்குடன் எடுக்கப்பட்ட இவ் நடவடிக்கையை தமிழீழ மக்கள் ஆதரித்தனர்.

TELO இயக்க உறுப்பினர்கள் கட்டுப்பாடு இல்லாமலும், எவருக்கும் அடங்காத முறையிலும் செயல்பட்டனர். அவர்கள், தமிழர் ஐக்கிய முன்னணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலைகள் உட்பட கொள்ளைகள், ஆள், வாகன கடத்தல்கள், பொது மக்களைக் கொலை செய்தல் போன்றவற் ஈடுபட்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். கோயில்களில் கொள்ளையடிக்கப் தற்கும், பொது மக்களின் நூற்றுக்கணக்கான வாகனங்கள் கடத்தப்பட்டதற்கும் TELO உறுப்பி ரே பொறுப்பாளிகளாவர். இப்படியான சமூக விரோத செயல்களினால் TELO இயக்கமானது கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வெறுப்பிற்கு ஆளாகியிருந்தது. இதனால்தான் மக்களின் ஆதரவை ழந்த பிற்போக்குவாத TELO கும்பலிற்கு எதிராக விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இவ் நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் வரவேற்றனர்.

ள்ளூர் பத்திரிகைகள் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் பொழுது, மக்கள் மகிழ்ச்சியடைந்தது மட்டுமல் ாமல் இவ் நடவடிக்கைகளில் ஈடுபட்ட விடுதலைப்புலி வீரர்கட்கு குளிர்பானம் வழங்கினர் என தெரி த்தனர்.

லைப்புலிகளின் நடவடிக்கையானது இந்தியாவின் சமாதான முயற்சியை முறியடிக்கும் முகமாக மிட்டு நடத்தப்பட்டது என்ற UNI நிருபரின் செய்தியானது திரிக்கப்பட்ட அப்பட்டமான பொய் கும். விடுதலைப்புலிகள் இந்தியாவின் சமாதான முயற்சிகளை எப்போதும் ஆதரித்தே வருகிறார்கள்.

பாராத இச்சம்பவம் TELO இயக்கத்தவர்கள் எமது மூத்த உறுப்பினர்களை கடத்தியதாலும் ம் என்ற தளபதியை கொலை செய்ததாலும் ஏற்பட்டதாகும். யாழ்ப்பாணத்தில் இந்தியாவிற்கு ாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளிற்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும், இந்தியா ம் விடுதலைப்புலிகட்கும் இடையில் பிளவை ஏற்படுத்தும் நோக்கிலேயே விடுதலைப்புலிகட்கு எதி சில தீய சக்திகள் இதைச்செய்துள்ளார்கள் என்பதும் புலனாகிறது.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

0067

14-5-86 அன்று தமிழீழ விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கை

தமிழர் விடுதலைக்கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலைக்கு TELO இயக்கமே பொறுப்பாகும்.

அண்மையில் TELO இயக்கத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையின்போது, TELO உறுப்பினரான கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பழனிவேல் தங்கராஜா இயக்கப் பெயர் பாலா என்பவர் கைது செய்யப்பட்டு விடுதலைப்புலிகளினால் தீர விசாரிக்கப்பட்டார்: 2-9-85 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரின் கொலைகளில் பங்கு பற்றியதை ஒப்புக்கொண்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை அனைவரையும் கொல்லும்படி TELO தளபதிகளில் ஒருவரான பொபி என்பவர் தங்களுக்கு கட்டளை பிறப்பித்ததாகவும், பொபியிடம் தாங்கள் காரணம் கேட்டபோது, "தலைமைப்பீடத்தின் முடிவு, இது அரசியல் தந்திரம், விளக்கம் தேவையில்லை" என்று கூறியதாகவும் அவர் கூறினார்.

அவர் தனது வாக்குமூலத்தில் மேலும் கூறியதாவது; "இக்கொலைகளுக்கு வஜந்தன் தலைமை தாங்கினார். நான், சிட்டிபாபு, ரஞ்சித் ஆகியோர் பங்குபற்றினோம். சம்பவம் நடைபெற்ற அன்று வல்வெட்டியிலிருந்த முகாமிலிருந்து புறப்பட்ட எமக்கு பழுப்பு நிற MORRIS OXFORD CAR தரப்பட்டது. இக்கார் சம்பவ தினத்திற்கு முதல்நாள் கிருபா என்பவரால் எங்கிருந்தோ கடத்திவரப்பட்டது. அக்காரில் நாங்கள் நால்வரும் மாலை 7.30 மணியளவில் ஆலாவின் வீட்டிற்குச் சென்றோம். கடவுச்சீட்டு விடயமாக பேச வேண்டுமென்று அவரிடம் கூறினோம். வெளியே வந்த அவரை பலவந்தமாக ஏற்றிக்கொண்டு தர்மலிங்கம் வீட்டிற்குச் சென்றோம். ஆலாலசுந்தரம் உங்களிடம் கதைக்க வந்துள்ளார் என்று தர்மலிங்கத்திடம் கூறி அவரையும் காரில் ஏற்றினோம். அவர்களை அழைத்துக் கொண்டு கோண்டாவிலை 8 அல்லது 8.30 மணியளவில் அடைந்தோம். தர்மலிங்கத்தையும் சிட்டிபாபுவையும் இறக்கிவிட்டு ஆலாலசுந்தரத்தை நல்லூர் ராச வீதிக்குக் கொண்டு சென்றோம். சனநடமாட்டமில்லாத இடத்திற்கு ஆலாலசுந்தரத்தின் கண்களைக்கட்டி நானும் வஜந்தனும் அழைத்துச் சென்று சுட்டுக்கொன்றோம். பின்னர் திரும்பி வந்து தர்மலிங்கத்தை ஏற்றிக் கொண்டு தாவடி தோட்டவெளிக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவரை சிட்டிபாபு சுட்டுக் கொன்றார். பின்னர் அவர்களது உடல்களை அவர்களது பாராளுமன்ற தொகுதிகளில் கொண்டு சென்று போட்டோம்."

"பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் மாவீரர் இருந்ததால் அன்று அவரைக் கொல்ல முடியவில்லை. நீலன் திருச்செல்வத்தையும் கொல்ல ஆயத்தங்கள் நடந்ததாக நான் அறிந்தேன். இக்கொலைகளுக்கு SMG2, AK 47 இயந்திரத்துப்பாக்கிகளை பயன்படுத்தினோம்" எனவும் அவர் தன் வாக்குமூலத்தில் மேலும் கூறியிருந்தார்.

இக் கொலைகளுக்கான பொறுப்பு விடுதலைப்புலிகளின் மேல் சுமத்தப்பட்டது. அக்குற்றச்சாட்டை நாம் அன்றே மறுத்தோம். இன்று ஆதார பூர்வமாக உண்மையை வெளிக்கொண்டு வருகின்றோம்.
ஆம்! உண்மைகள் வெளிவருவதற்கு வெளிச்சங்கள் தேவையில்லைதான்.
கொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் இரங்கற் கூட்டத்தில் TELO வினர் பங்குபற்றி தமது அனுதாபத்தைத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. ENLF உம் விடுதலைப்புலிகளும் கூட்டாக இயங்கியபோதே TELO வினர் இப்படுகொலையைப் புரிந்து விட்டு எம்மீது பழியைப் போட்டனர்.

உண்மையற்ற செய்திகளை பொய்யான ஆதாரங்களைக்காட்டி திரிவு படுத்தி விசமத்தனமான பிரச்சாரங்களை சில சந்தர்ப்பவாதிகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவைகளை வன்மையாக கண்டிக்கும் அதேவேளை இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டுமென்பதையும் அறியத்தருகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்